# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் – 2018

2


visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in


Scanned with CamScanner

14. தாழை மதியவனின் 'பூ மழை பொழியும்' சிறுகதைத் தொகுப்பில் வாழ்வியல் பதிவுகள்
*சே.சையது அபுதாகீர் - 39

15. தெருக்கூத்தில் வாழ்வியல் சிந்தனைகள்
*கு.திருமலைசாமி - 41

16. இலக்கியங்களில் பண்டைத் தமிழர்களின் தொழில்கள்
*முனைவர் க.கிருஷ்ணவேணி - 45

17. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்
*வி.கார்த்திகாயினி - 49

18. பன்னிரு ஆழ்வார்களின் திவ்விய வரலாறு
*பா.கவிதா - 52

19. தானியேல் புத்தகத்தில் காணப்படும் வேற்றுமை உருபுகள்
*மே.ப.பெனிற்றா - 55

20. முல்லைப்பாட்டும் வாழ்வியல் சிறப்புகளும்
*மா.நஜ்முன் - 58

21. எட்டுத்தொகை நூல்களில் நடுகல் மரபு
*ஆர்.நளினி, *நெறியாளர்: முனைவர் சு.இளமாறன் - 61

22. சிறுவர் இதழ்களில் இடம் பெறும் இலக்கிய வகைகள்
*நித்யா.கோ - 64

23. நற்றிணை புலப்படுத்தும் பிரிவாற்றாமை
*ஜெ.ராஜசெல்வி - 67

24. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்
*சு.ருக்குமணி - 70

25. 'கொடிமரத்தின் வேர்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில் இயற்கைப் பாதுகாப்புச் சிந்தனைகள்
*சதீஸ்.செ - 74

26. கிளாரிந்தாவில் வாழ்வியல் சிந்தனை. அ.மாதவையா நாவலை முன்வைத்து
*மு.செல்வக்குமார், *முனைவர் வி.தீப்தி - 77

27. புறநானூற்றில் உணவு நெறி
*சு.செங்குகுமார், *நெறியாளர் - முனைவர் சு.உமா - 80

28. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனை
*ஆ.சுரேஷ் - 83


Scanned with CamScanner

# புறநானூற்றில் உணவு நெறி

*சு.செங்குகுமார், முனைவர் பட்ட ஆய்வாளர் (18221074021006), வெ.ப.சு. தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி – 627 012.
*முனைவர் சு.உமா (நெறியாளர்), உதவிப்பேராசிரியர், அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, திருநெல்வேலி – 627 005.

**முன்னுரை**

பண்டையத் தமிழகத்தில் அரிய தொகுப்பாகவும், பண்பாட்டுக் களஞ்சியமாகவும், இலக்கியக் கருவூலமாகவும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொகை நூலாக திகழக்கூடியது புறநானூறு ஆகும். இந்த நூல் நானூறு பாடல்கள் கொண்டது என்று கூறினாலும் இருபாடல்கள் கிடைக்கப் பெறவில்லை (பாடல் 267 மற்றும் 268). இதில் பதினான்கு பாடல் பாடியோர் பெயர் அறிய முடியவில்லை. புறநானூறு சுட்டும் பழந்தமிழரின் உணவுப் பழக்கத்தினை இக்கட்டுரை பகுத்து விளக்குகிறது. புறம் சுட்டிய உயர்திணையான உழவர், உழத்தியர், வேடர், பாணர், வீரன், மனைவி கிணைப் பொருநன், மலைவாழ் மக்கள், இடைமகள், பரதவர் மற்றும் தேவர்கள் முதலானோர் வாழ்வில் கடைபிடித்த உணவு முறைகளை நிரல்படக் காணலாம்.

**உயர் திணை உணவுப்பழக்கம்**

**உழவர்**

தென்னை இளநீரை உண்பர் என்பதை
நெல்விளை கழனிப் படு புள் ஓப்புநர்
ஒழி மடல் விறகின் கழிமீன் சுட்டு
வெங் கள் தொலைச்சியும் அமையார் தெங்கின்
இளநீர் உகுக்கும்........................... (29 13-16)

நெல் விளைந்த வயலில் பறவைகளை விரட்டும் உழுகுடியோர் கீழே வீழ்ந்த பனங் கருக்கை விறகாகக் கொண்டு கழியிடத்துப் பிடித்த மீனைச் சுடுவர். அதனோடு சேர்ந்து விருப்பம் மிகுந்த கள்ளை உண்பர். இது போதாதென்று

கீழ் மடைக் கொண்ட வாளையும் உழவர்
படை மிளிர்ந்திட்ட யாமையும் அறைநர்
கரும்பில் கொண்ட தேனும் .......... (42 13-15)

உழவர் நீரின் கடை மடையில் பிடித்த வாளை மீனையும், ஆமையையும், கரும்பின் தேனையும் செங்கழுநீர் மலர்களையும் சுற்றத்தார்க்கும் விருந்தாக அளிப்பர் என்பது இடைக்காடனார் வாகைத் திணையில் அரச வாகையில்,

களமர்க்கு அரித்த விளையல் வெங் கள்
யாமைப் புழுக்கின் சூடு அம் கவுள் அடாஅ (212 2-3)

உழவர் அரிக்கப்பட்ட முதிர்ச்சியுற்ற விரும்பத் தக்க மதுவை ஆமை இறைச்சியோடு வேட்கை தீர உண்பர் என்பதை பிசிராந்தையாரின் பாடாண் திணை, பரிசில் துறைப் பாடல் மூலம் அறியலாம்.

**உழத்தியர்**

தளம்பு என்பது சேற்றுக் கட்டி உடைக்கும் கருவி ஆகும்
பழன வாளைப் பரூஉக் கண் துணியல்
புது நெல் வெண் சோற்றுக் கண்ணுறை ஆக (61 4-5)

புதுநெல் சோற்றிற்கு வயலில் பிறழும் வாளை மீனை, தளம்பு என்னும் கருவியால் துண்டாக்கி அதன் பருத்த ஊனை, கழி உணவாகக் கொடுப்பதை மதுரைக் குமரனார் வாகை திணையில் அரச வாகையில் கூறியுள்ளார்.

**வேடவர்**

மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பும்........ (33 2-6)



Scanned with CamScanner

மான் தசை, தயிர், உழத்தியர் தந்த வெண்நெல் போன்றவற்றை பக்குவமாக்கி உண்டான் என்பதினை வாகைத் திணை அரச வாகைத் துறையில் கோவூர் கிழார் பாடிய பாடல் வழி குறிப்பால் அறிய முடிகிறது.

**பாணர்**

மலரா மாலைப் பந்து கண்டன்ன
ஊன் சோற்று அமலை... (33 13-14)

பந்து வடிவம் போன்ற ஊனுடன் கூடிய பெரிய சோற்றுத் திரளை பாணர்கள் புரவலனிடமிருந்து பெற்றனர் என்ற குறிப்பினை வாகைத்திணை அரச வாகைத் துறையில் கோவூர் கிழார் பாடிய பாடல் வழி அறிய முடிகிறது.

தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டு ..... (327 3-4)

பாணர்கள் பசியால் நலிவுற, வீரன் தான் ஈட்டிய வரகினை கடன்காரர்களுக்குக் கொடுத்து எஞ்சியவற்றை பாணர்களுக்குக் கொடுத்தான் என்ற செய்தி வாகைத் திணை, மூதின்முல்லைத் துறைப் பாடல் வழி அறிய முடிகிறது. பாடிய புலவர் பெயர் அறிய முடியவில்லை

**வீரன் மனைவி**

............விதைத் தினை உரல்வாய்ப் பெய்து (333 12)

விதைப்பதற்காக வைத்திருந்த வரகினை குற்றி உணவு சமைத்து வீரனின் மனைவி வழங்கினாள் என்பதை வாகைத் திணை மூதின் முல்லைத் துறைப் பாடல் வழி அறிய முடிகிறது. பாடிய புலவர் பெயர் அறிய முடியவில்லை

**கிணைப் பொருநன்**

திருந்தா முரி பரந்து படக் கெண்டி
அரியல் ஆர்கையர் உண்டு இனிது உவக்கும் (391 5-6)

பொறையாற்றுக் கிழானிடம் கல்லாடனார் பரிசு பெற்றதை பாடாண் திணை கடைநிலைத் துறையில் கூறுமிடத்து, கள் அருந்தும் பொழுது திருந்தாத கறியை சிறு சிறு துண்டங்களாக்கி கிண்டி உடனுண்டதை எனப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

தோடிமாண் உலக்கைப் பருஉக் குற்று அரிசி
காடி வெள்உலைக் கொளீஇ நீழல்
ஓங்கு சினை மாவின் தீம் கனி நறும்புளி
மோட்டு இரு வராஅல் கோட்டு மீன் கொழுங்குறை
செறுவின் வள்ளை சிறு கொடிப் பாகல்...... (399 2-6)

ஐயூர் முடவனார் பாடாண் திணையில் பரிசில் துறையில் பாடிய பாடலில் கிணைமகள் வெண்ணெல்லை பூணிடாத பருத்த உலக்கையால் குற்றி அரிசி ஆக்கியதையும், காடிநீர் ஊற்றிய உலையில் சேர்ந்து உணவாக்கியதையும் கூறுகிறார். பெரிய மாமரத்தின் கனியைப் பிசைந்து செய்த நறிய புளிக் குழம்பு சுறாமீனின் துண்டமாகிய கொழுவிய இறைச்சி, வயல்களில் படர்ந்த வள்ளைக் கீரை, பாகற்காய், போன்றவற்றை உணவுடன் சேர்ந்து உண்டனர். ஆனால் இது பொழுது மறுத்து உண்ணும் நிலையில் உள்ளதையும் சுட்டுகிறார்.

அகநானூறிலும்

'மாவுன் தீங்கனி நறும் புளி.......' (அகம் 37 7)

என்ற தொடர் இடம் பெறுவதைக் காணலாம்.

'பொழுது மறுத்து உண்ணும் சிறு மது கையளே' (நற் 110 13)

என்பதிலும் பொழுது மறுத்து உண்ணும் தலைவியைக் காணலாம்.

**மலைவாழ் மக்கள்**

நிலம் புதைப் பழுனிய மாட்டின் தேறல்
புல் வேய் குரம்பைக் தொறும் பகர்ந்து
நறு நெய்க் கடலை விசைப்ப சோறு அட்டு (120 12-14)

கபிலர் பாரியின் பறம்பு நாட்டு வளத்தைக் கூறுமிடத்து புல்லால் வேய்ந்த சிறு மனையின் கண் உள்ள மலைவாழ் மக்கள் நிலத்தில் புதைக்கப்பட்ட முற்றிய மதுவை குடியுள்ள இடந்தோறும் உண்ணக் கொடுப்பர் நறு நெய்யிலே கடலையை வறுத்து அதனோடு சோறும் சமைத்துக் கொடுப்பர் எனப் பொதுவியல் திணையில் கையறுநிலையில் அமைந்த துறையில் கூறுகிறார்.

**இடைமகள்**

கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாது எரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண் தயிர்க் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம் புளி மிதவை (215 1-4)



Scanned with CamScanner

கவையாகப் பிளந்த வரகக் கதிரை குற்றிச் சமைத்த சோற்றை வேளைப் பூவோடும், தயிரோடும் சேர்த்து உண்டான அழகிய புளித்த கூழை உண்பர். அவரைக்காயை பறித்து உண்பதும் உண்டு என்ற குறிப்பினை கோப்பெருஞ்சோழன் பாடாண்திணையில் இயன் மொழித் துறையில பாடியுள்ளார்.

பரதவர்

> இரும் பனையின் குரும்பை நீரும்
> பூங் கரும்பின் தீம் சாறும்
> ஓங்கு மணற் குவவுத் தாழைத்
> தீம் நீரொடு உடன் விராஅய் (24 12-15)

பனைக் குரும்பையின் நுங்கு நீரும் பூவினை உடைய கரும்பின் சாறும், உயர்ந்த மண் பகுதியில் திரண்டு விளைந்த தெங்கின் இளநீரும் கலந்து முந்நீராய்க் குடித்ததை மாங்குடி கிழார் பொதுவியல் திணையில் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் பாடி உள்ளார்.

தேவர்கள்

> அவி உணவினோர் புறங் காப்ப (377 5)

உலோச்சனார் பெருநற்கிள்ளியை பாடாண் திணை வாழ்த்தியல் துறையில் பாடுமிடத்து தேவர்கள் அவி உணவை ஏற்றுக் கொண்டு புறம் நின்று காத்தனர் என்ற செய்தியை கூறுகிறார்.

## தொகுப்புரை

- ✓ உழவர் மீனைச் சுட்டும் கள் அருந்தியும் பொழுதுக்கான வாழ்க்கை வாழ்ந்துள்ளார்
- ✓ உழவர் சுற்றத்தார்க்கு தளம்பு என்னும் கருவியால் வாளை மீன், ஆமை கரும்பின் சாறு, செங்கழுநீர் மலர் ஆகியனவற்றை அளிப்பர்
- ✓ உழத்தியர் கழி உணவாக வயலில் பிறழும் வாளை மீனைத் தளம்பு என்னும் கருவியால் துண்டாக்கி அதன் பருத்த உணவினை அளித்தாள்.
- ✓ வேடர்கள் மான் தசை, வெண்ணெல் சோறு உண்டனர்.
- ✓ பாணர்கள் வரகு, பந்து வடிவம் போன்ற ஊனுடன் கூடிய சோற்றுத் திரளை புரவலனிடமிருந்து பெற்று உண்டனர்.
- ✓ வீரன் மனைவி விதைப்பதற்காக வைத்திருந்த விதை வரகினை குற்றி உணவு உண்டாக்கிக் கொடுத்தாள்.
- ✓ கிணைப் பொருஞன் கள் அருந்தும்போது திருந்தாத கறியை சிறு சிறு துண்டங்களாக்கி கிண்டி உண்டான்.
- ✓ கிணைமகள் வெண்ணெல்லை குற்றிக் காடி நீர் ஊற்றி உணவாக்கி, மணமுள்ள புளிக் கொழம்புஇ சுறாமீன் துண்டு, வள்ளைக் கீரை, பாகற்காய் போன்றவற்றை உணவாக்கிக் கொடுத்து உண்டாள்.
- ✓ மலைவாழ் மக்கள் நிலத்தில் நீண்ட நாள் புதைத்து வைத்திருந்த மதுவினை குடி உள்ள இடந்தோறும் கொடுத்தனர்.
- ✓ இடை மகள் வரகுக் கதிர் சோற்றைஇ பூளைப் பூஇ தயிர் சேர்த்து கூழாக்கி உணவாக்கினாள்.
- ✓ பரதவர் நுங்கு நீர், கரும்பு சாறு, இளநீர் மூன்றும் சேர்த்துப் பருகினார்
- ✓ தேவர்கள் அவி உணவினை ஏற்றனர்.

வெண்ணெல் சோறு அரிதாகவும் வரகுத் திணை சோறு பரவலாகவும் உண்டார்கள். உணவோடு இறைச்சி சேர்த்தே உண்டனர். கொழம்பில் புளிக் கொழம்பு மட்டுமே பதிவாகி உள்ளது. விதை நெல்லைக் கூட விருந்தினருக்கு அளித்த சிறப்புத் தமிழரின் உயர்ந்த பண்பை வெளிக்காட்டுகிறது.

## துணை நின்ற நூல்கள்


1. செயபால் இரா. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. மூஅ பிப் 2007.
2. பாலசுப்பிரமணியன் கு.வெ. நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. மூஅ பிப் 2007.
3. பாலசுப்பிரமணியன் கு.வெ. புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. மூஅ பிப் 2007.





Scanned with CamScanner